2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரின் விரிவான பதிலுக்கு மிக்க நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 145, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

145—

கலைக் கல்லூரி

***11986— திரு. கோ. செந்தில் குமார்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதியில் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வாணியம்பாடி தொகுதி அமைந்துள்ள திருப்பத்தூர் மாவட்டத்தில் தற்பொழுது ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், மூன்று அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் ஒன்பது சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இவை தவிர நான்கு சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், ஓர் அரசு பாலிடெக்னிக் கல்லூரியும் மற்றும் 10 சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ, மாணவியரின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதியில் புதியதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

[2023 ஏப்ரல் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார் அவர்கள்.*

திரு. கோ. செந்தில் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி), கழகப் பொதுச் செயலாளர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். எனது வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதியில் 17 அரசு மேல்நிலைப் பள்ளிகளும், 5 அரசு நிதி உதவிபெறும் பள்ளிகளும் மற்றும் 20 தனியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன. ஆக மொத்தம் 42 பள்ளிகளையும் சேர்த்து, நான்காயிரம் பள்ளி மாணவ, மாணவியர் ஆண்டுதோறும் பள்ளிப் படிப்பை முடித்து பட்டப்படிப்பு உள்ளிட்ட மேற்படிப்பிற்காக தனியார் கல்லூரியான இஸ்லாமிய கல்லூரி—மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் படித்த கல்லூரி. மிகவும் பிரசித்திபெற்ற, 100 ஆண்டு கால பழமையான கல்லூரி—கட்டணம் ஒரு செமஸ்டருக்கு ரூ.20 ஆயிரம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. உங்கள் கேள்வி கல்லூரி வேண்டும். அதற்கு இவ்வளவு கல்லூரி இருக்கிறது என்று சொல்லியாகிவிட்டது. மறுபரிசீலனை செய்யச் சொல்லுங்கள்.*

திரு. கோ. செந்தில் குமார்: *அந்தக் கல்லூரி ஆண்கள் பயிலும் கல்லூரி. அதேபோல், ஜெயின் கல்லூரியும் மகளிருக்கான கல்லூரி. அங்கேயும் செமஸ்டருக்கு கட்டணம் ரூ.30 ஆயிரம். எனது வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதியில் ஓர் அரசு கல்லூரி இருந்தால் ஏழை, எளிய மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் அமையும். எனவே, மீண்டும் பரிசீலனை செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு கலைக் கல்லூரி அமைத்துத் தர ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முதலிலேயே அறிவித்திருக்கிறார்.*

2023 ஏப்ரல் 12]

நானும் உங்களிடம் பலமுறை அந்தக் கேள்விக்குப் பதில் கூறியிருக்கிறேன். எந்தெந்தத் தொகுதிகளில் அரசு கலைக் கல்லூரி இல்லையோ அங்கேயெல்லாம் படிப்படியாக உருவாக்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம். அந்த அடிப்படையில்தான் அவரும் இந்த 2 ஆண்டுகளிலே 31 கல்லூரிகளை உருவாக்கியிருக்கிறார். வருங்காலங்களிலே அவை படிப்படியாக உயர்த்தப்படும். நீங்கள் கூறியதுபோல், நம்முடைய அவை முன்னவர் அவர்கள் படித்த இஸ்லாமிய கல்லூரியும் வாணியம்பாடியில் இருக்கிறது. அங்கே 894 இடங்கள் ஒப்பளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், சேர்ந்திருக்கிற மாணவர்கள் 767 பேர்தான். சுயநிதிக் கல்லூரிகள் 2 இருக்கின்றன. மொத்தம் 2,512 பேர் படிக்க இடம் ஒப்பளிக்கப்பட்டிருந்தாலும், அங்கே சேர்ந்திருப்பது 1,706 பேர்தான். மொத்தம் 806 இடங்கள் காலியாக இருக்கின்றன. அந்தமாதிரிதான் ஒவ்வொரு கல்லூரியும். எனவே, காலியாக இருக்கின்ற இடங்களையெல்லாம் நிரப்புவதற்கு மாணவர்களை அங்கே சேர்க்குமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். வருங்காலங்களிலே அரசினுடைய நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதைப்போல, அரசு கலைக் கல்லூரி இல்லாத தொகுதிகள், அதிலும் குறிப்பாக, அரசு கலைக் கல்லூரி இல்லாத மாவட்டங்களையெல்லாம் கருத்தில் கொண்டு படிப்படியாகக் கொடுப்பதற்கு அரசு முன்வரும்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார் அவர்கள்.*

திரு. கோ. செந்தில் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* actual *ஆக ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு கல்லூரி என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதனால், அந்தக் கல்லூரியின் கோரிக்கையை முன்வைத்திருந்தேன். எங்கள் மாவட்டத்தில், கடந்த பத்தாண்டுக்கால எங்கள் ஆட்சியில், திருப்பத்தூர் தொகுதியில் ஒன்று, ஆம்பூர் தொகுதியில் ஒன்று என 2 அரசு கல்லூரிகளை அமைத்துத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, வருகின்ற காலத்தில் முன்னுரிமை கொடுத்து வாணியம்பாடி தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல 12 கல்லூரிகள் இருக்கின்றன. விழுப்புரம் மாவட்டத்தில்,*

[*2023 ஏப்ரல் 12*

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் ஆளுகையின் கீழிருந்த PG Extension Centre, *தற்போது* Anna University*-ன்கீழ் கொண்டு செல்லப்பட்டுவிட்டது. எனவே, தற்போது திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதியில் ஒரு* PG Extension Centre *அமைத்துத் தந்தால் கிராமப்புறப் பகுதிகளிலிருந்து வருகின்ற மாணவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். ஆண்டொன்றிற்கு சுமார் 14 ஆயிரம் பேர்* UG courses*-ல் சேர்கின்றார்கள்;* PG courses *படிப்பதற்கும்,* Research courses *மேற்கொள்வதற்கும், மேற்படிப்புகள் படிப்பதற்கும், திருப்பத்தூர் மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து வாணியம்பாடி தொகுதியில் ஒரு* PG Extension Centre*-ஐ அமைத்துக் கொடுத்தால் பயனுள்ளதாக இருக்கும். அதைச் செய்து தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* PG Extension Centre, Research courses *ஆகியவற்றையெல்லாம் கல்லூரிகளிலேயே உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் தமிழக அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். மேலும்,* PG Extension Centres *பெரும்பாலும்* Universities*-ல்தான் ஆரம்பிக்கப்படுகின்றன. அவற்றைக் கல்லூரிகளிலும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைஎடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, உங்கள் தொகுதியைப் பொறுத்தவரை,* PG Extension Centre *எங்கே வர வேண்டுமென்றால், அங்குள்ள இஸ்லாமிய கல்லூரியில்* PG Extension Centre *இருக்கும் என்று நினைக்கிறேன். அங்கே இல்லையென்றால் அந்தக் கல்லூரியில்* PG Extension Centre *கொடுக்கலாம். அது அரசு உதவிபெறும் கலைக் கல்லூரி. அதுபோன்று இருக்கக்கூடிய கல்லூரிகளுக்கு உதவி செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆகவே, தற்போது மாணவர்களின் தேவைகளுக்கேற்ப எல்லாவற்றையும் செய்ய வேண்டும். அவர்களது எண்ணிக்கையை மட்டுமல்ல, திறமையையும் அதிகரிக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 'நான் முதல்வன்' திட்டத்தை அறிவித்தார்கள். நேற்றுகூட மாண்புமிகு இளைஞர்*

2023 ஏப்ரல் 12]

நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, 'நான் முதல்வன்' திட்டத்தை அதிகமாகச் செயல்படுத்தி எல்லா கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும், Polytechnic *கல்லூரிகளிலும் விரிவுபடுத்தி செயல்படுத்துவதற்கு திட்டமிட்டிருக்கிறோம். ஆகவே, வருகிற காலங்களில் எண்ணிக்கையை மட்டுமின்றி, தரத்தையும் உயர்த்துவோம்.* PG Extension Centre, Research courses *ஆகியவற்றையும் அமைப்பதற்கான முயற்சிகளை இந்த அரசே மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. சங்கர் அவர்கள். (குறுக்கீடு) அவருக்கு* mike *கொடுங்கள்.*

திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான ஆட்சிக் காலத்தில், நம்முடைய வரலாற்றுத் தலைவர் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியின்போது, கலை மற்றும் அறிவியல் கல்லூரி வந்தது. பின்னர், ஆட்சி நிறைவுபெற்ற காரணத்தினால் அந்த அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒன்றாம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலக்கூடிய பள்ளியில் இயங்கி வருகிறது. தொடர்ந்து 10 ஆண்டுகள் ஆட்சி செய்த ஆட்சியாளர்கள், அந்தப் பத்தாண்டுகளில், அந்தக் கல்லூரிக்கு எந்தவிதமான கட்டடத்தையும் கட்டித் தரவில்லை. அங்கு அடிப்படை வசதிகளும் இல்லை. மழை பெய்தால்கூட, அந்தக் கல்லூரிக்கு விடுமுறை அறிவிக்க வேண்டிய நிலை இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கட்டடம் வேண்டும் அவ்வளவுதானே!*

திரு. கே.பி. சங்கர்: *ஆகவே, நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வரலாற்று முதல்வர் அவர்களும் அங்கு கட்டடங்களைக் கட்டித் தர ஆவன செய்வார்களா என்பதைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை*

அதிகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். எந்தெந்தக் கல்லூரிகளுக்கு அவசியமாகத் தேவைப்படுகிறதோ, அந்தக் கல்லூரிகளுக்கெல்லாம் கட்டடங்களைக் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம். நிச்சயமாக உங்களுடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

146—

மரக் கன்றுகள் நடுதல்

***12908—திரு. மா. சின்னதுரை:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை தொகுதிக்குள் செல்லும் நெடுஞ்சாலைத் துறையின் சாலையோரங்களில் மரக் கன்றுகளை நடவும், பராமரிக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டை தொகுதியைப் பொறுத்தளவில், மாநில நெடுஞ்சாலைகள் 33 கி.மீ., மாவட்ட முக்கியச் சாலைகள் 115 கி.மீ., இதர மாவட்ட சாலைகள் 279 கி.மீ., கரும்பு அபிவிருத்தித் திட்ட சாலைகள் 11 கி.மீ., ஆக மொத்தம் 438 கி.மீ. சாலைகள் நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அந்தச் சாலைகளில் ஏற்கெனவே 2 ஆயிரத்து 50 மரங்கள் உள்ளன. மேலும், இந்த இரண்டாண்டுக் காலத்தில் 2 ஆயிரத்து 762 மரக் கன்றுகள் நடப்பட்டு, நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மொத்தமாக 40 ஆயிரத்து 700 மரங்கள் துறையின் சார்பாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.